# ‘பாரத் சங்கீத உற்சவம்’ சென்னையில் துவக்கம்

சென்னை, நவ. 4-

‘பாரத் சங்கீத உற்சவம்’ இசை நிகழ்ச்சி, சென்னையில், நேற்று முன்தினம் துவங்கியது.

சென்னை, ஆழ்வார்பேட்டை பகுதி, நாரத கான சபாவில், நேற்று முன்தினம் மாலை, மங்கள இசையுடன் விழா துவங்கியது. அப்பல்லோ மருத்துவமனை நிர்வாக இயக்குனர் ப்ரீத்தா ரெட்டி, குத்து விளக்கேற்றி நிகழ்ச்சியை துவக்கி வைத்தார்.



அப்பல்லோ மருத்துவமனை நடத்தும், ‘பாரத சங்கீத உற்சவம்’ நிகழ்ச்சியில், மதுரை மணி சங்கர் ஐயரின் நூற்றாண்டு புத்தகத்தை பாலமுரளி கிருஷ்ணா வெளியிட்டார். உடன் [இடமிருந்து] டி.என்.பி.எஸ்.சி., தலைவர் நடராஜ், அமெரிக்க தூதரக அதிகாரி ஜெனிபர், ஜவுளி வர்த்தகர் நல்லி குப்புசாமி, சங்கர நாராயணன், புத்தக ஆசிரியர் லஷ்மி தேவ்நாத் மற்றும் அப்பல்லோ மருத்துவமனை நிர்வாக இயக்குனர் ப்ரீத்தா ரெட்டி.

மதுரை மணி சங்கர் ஐயரின் நூற்றாண்டு விழாவையொட்டி, லட்சுமி தேவ்நாத் எழுதிய, ‘மதுரை மணி சங்கர் ஐயர்’ எனும் புத்தகம் வெளியிடப்பட்டது.

இவ்விழாவில், அமெரிக்க தூதரக அதிகாரி ஜெனிபர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

அவர் பேசுகையில், ‘‘என் பெற்றோர், இசைப்பிரியர்கள். இங்குள்ள பல ஜாம்பவான்களை அவர்களுக்கு மிகவும் பிடிக்கும். இதில் கலந்து கொள்வது மிகுந்த மகிழ்ச்சி,’’ என்றார்.

விழாவில், டி.என்.பி.எஸ்.சி., தலைவர் நடராஜ், நல்லி குப்புசாமி செட்டியார், இசை மேதை பாலமுரளி கிருஷ்ணா, வி.வி.சுந்தரம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதை தொடர்ந்து, பிரபல இசைக் கலைஞர்களின் கடம், மிருதங்கம் மற்றும் வயலின் இன்னிசை நிகழ்ச்சி நடந்தது.

இந்த சிறப்பு உற்சவம், வரும், 11ம் தேதி வரை நடக்கிறது.